அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2023/2024

# தமிழ் - ஆண்டு 9

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

உலகிலே பல்வேறு இனமக்கள் வாழ்கின்றனர். அவர்களது நிறம், உடலமைப்பு, உணவு, உடை, உறையுள், பழக்கவழக்கங்கள் போன்றன இடத்துக்கிடம் வேறுபடுகின்றன. காலநிலையே இவ்வேறுபாட்டுக்கான காரணமாகும். மாந்தர் சில பிரதேசங்களில் அதிக குளிரினாலும் வேறு சில பிரதேசங்களில் அதிக வெப்பத்தினாலும் துன்புறுகின்றனர். இன்னும் சில இடங்களில் அதிக மழையினால் பேரழிவுகளுக்கு உள்ளாகுகின்றனர். மோசமான காலநிலையற்ற ஏனைய இடங்களில் மாந்தன் இத்தகைய துன்பங்களுக்கு உள்ளாவதில்லை.

இத்தகைய காலநிலை வேறுபாடுகள் மாந்த வாழ்வின் பல செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தும் முதன்மைக் காரணிகளாகின்றன. அதிக மழையினால் மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை இழந்து அவதியுறும் நிலை ஏற்படுகிறது. இப்படியான இடர்களின்போது அவர்களது தேவைகளை நிறைவேற்ற வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும். மோசமான காலநிலையற்ற இடங்களில் வாழ்வோர் தம்மாலான உதவிகளை மனமுவந்து செய்தல் அகத்தியமாகும்.